**கவனிக்க**.-2024.04.19 ஆந் திகதிய 2381 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III, பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2382 - 2024 අප්‍රේල් මස 26 වැනි සිකුරාදා - 2024.04.26

2382 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 60 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 62 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மே மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்
## பிசுக்கால் ஏல விற்பனையில் விற்பனை செய்தல்

*மர்கண்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அண்ட் பைனான்ஸ் பீஎல்சீ (முன்பு மர்கண்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனம் என்பதாக அழைக்கப்பட்ட) இல.236, காலி வீதி, கொழும்பு 03.*

*வழக்காளி*

*கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் - DHP -00591/15*

*திருகோணமலை மாவட்ட நீதிமன்ற அஸ்கீசி இலக்கம் - No./8/21*

*- எதிர்-*

1. தேனுவர ஹென்னதிகே எரங்க புத்திக, 10/13, என். சீ. வீதி, திருகோணமலை.
2. விக்ரம கலதொட்ட ஹேவாகே அனில் குமார, 88/01, காமினி திசாநாயக்க மாவத்தை, மகாமாயபுர, திருகோணமலை.
3. அதுல சமன்த கிறிஸ்தோகு, பாடசாலை வீதி, சம்பா ஒழுங்கை, ஆந்தன்குளம், திருகோணமலை.

*எதிராளிகள்.*

மேற்படி இலக்கமுடைய வழக்கில் 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதியுடைய தீர்ப்பு அறிவிப்பின் பிரகாரம் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட 03 ஆவது எதிராளியினால் வழக்காளி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள,

ரூ. 2,363,532.23 தொகை மற்றும் தீர்ப்பு அறிவிப்பு திகதி முதல் குறித்த பணத்தொகையுடன் தொடர்பான சட்ட ரீதியான வட்டியையும் கூட்டாக அல்லது தனித்தனியாக செலுத்துவதற்கும்,

வட்டியை அறவிட்டுக் கொள்ளும் போது குடியியல் கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதாகவுமாகும்.

குறித்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனத்தை தடைசெய்து விற்பனை செய்யும் அஸ்கீசி அதிகாரத்தின் பிரகாரம் என்னால் தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ள,

மேலே 3 ஆவது எதிராளியிடம் உள்ள அசையும் சொத்துக்களை 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு திருகோணமலை, ஆந்தன்குளம், சம்பா ஒழுங்கை, பாடசாலை வீதி என்னும் இடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.

### மேற்குறிப்பிட்ட ஆதன அட்டவணை

01. சம்சுன் வகையினை சேர்ந்த 32 அங்குல நீளமான LED தொலைக்காட்சி 01 மற்றும் அந்தத் தாங்கியுடனான டயலொக் ரவுடர் 01.
02. கண்ணாடிகளுடனான 05 அடி உயரமுள்ள பலகை அலுமாரி 01.
03. கறுப்பு மற்றும் பழுப்பு நிறமுடைய பிளாஸ்டிக் கதிரைகள் (கறுப்பு நிறமுடைய கதிரைகள் 06, பழுப்பு நிறமுடைய கதிரைகள் 03)
04. 6 ½ X 3 அளவினை உடைய தளபாட உணவு மேசை 01 மற்றும் வேலைப்பாடுகள் செய்யப்பட்டு குசன் போடப்பட்ட தளபாடக் கதிரைகள் 06.
05. டெலிசொனிக் வகையினைச் சேர்ந்த ஸ்டேண்ட் மின்விசிறிகள் 02.
06. 3 கதவுகளை கொண்ட 5 ½ அடி உயரமான உருக்கு அலுமாரிகள் 02. (கறுப்பு மற்றும் கபில நிறம்)
07. OMAQ வகையினை உடைய இலத்திரனியல் தராசு 01.
08. சிங்கர் வகையை சேர்ந்த தனிக் கதவினை கொண்ட சாம்பல் நிறமுடைய குளிர்சாதனப் பெட்டி 01.
09. ஷெல் வகையினை சேர்ந்த 12kg, அளவு கேஸ் சிலிண்டர்.

10. அபான்ஸ் வகையை சேர்ந்த 7.5 kg மற்றும் ஹேயர் வகையை சேர்ந்த 7 kg உடைய சலவை இயந்திரம் 01.

11. தம்ரோ வகையைச் சேர்ந்த கபில நிறமுடைய அலுவலக மேசை 01.

12. SUDROLLA வகையை சேர்ந்த நீர்ப் பம்பி 01.

டாக்டர் ஆர். ஜியோமெல்ரோய் குரூஸ்,
பதிவாளர்/பிரதி பிசுக்கால்
சமாதான நீதவான் (தீவு முழுவதும்)
புரொபெட் அதிகாரி,
மாவட்ட நீதிமன்றம் - திருகோணமலை.

2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆம் திகதி.

04-393/1

---

**திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்**

**பிசுக்கால் ஏல விற்பனையில் விற்பனை செய்தல்**

மர்கண்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் அண்ட் பைனான்ஸ் பீஎல்சீ (முன்பு மர்கண்டைல் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனம் என்பதாக அழைக்கப்பட்ட) இல. 236, காலி வீதி, கொழும்பு 03.

வழக்காளி

கொழும்பு மாவட்ட நீதிமன்ற
வழக்கு இலக்கம் - DHP- 00591/15

- எதிர் -

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற
அஸ்கீசி இலக்கம் - 1/19

1. தேனுவர ஹென்னதிகே எரங்க புத்திக, 10/13, என். சீ. வீதி, திருகோணமலை.

2. விக்ரம கலதொட்ட ஹேவாகே அனில் குமார, 88/01, காமினி திசாநாயக்க மாவத்தை, மகாமாயபுர, திருகோணமலை.

3. அதுல சமன்த கிறிஸ்தோகு, பாடசாலை வீதி, சம்பா ஒழுங்கை, ஆந்தன்குளம், திருகோணமலை.

எதிராளிகள்.

மேற்படி இலக்கமுடைய வழக்கில் 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆம் திகதியுடைய தீர்ப்பு அறிவிப்பின் பிரகாரம் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட 02 ஆவது எதிராளியினால் வழக்காளி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ள,

ரூ. 2,363,532.23 தொகை மற்றும் தீர்ப்பு அறிவிப்பு திகதி முதல் குறித்த பணத்தொகையுடன் தொடர்பான சட்ட ரீதியான வட்டியையும் கூட்டாக அல்லது தனித்தனியாக செலுத்துவதற்கும்,

வட்டியை அறவிட்டுக் கொள்ளும் போது குடியியல் கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவிற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதாகவுமாகும்.

குறித்த வழக்கில் எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆதனத்தை தடைசெய்து விற்பனை செய்யும் அஸ்கீசி அதிகாரத்தின் பிரகாரம் என்னால் தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ள,

மேலே 2 ஆவது எதிராளியிடம் உள்ள அசையும் சொத்துக்களை 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு திருகோணமலை, மகாமாயபுரம், காமினி திசாநாயக்க மாவத்தை, இல. 88/01. என்னும் இடத்தில் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**மேற்குறிப்பிட்ட ஆதன அட்டவணை**

01. EP BCG 6954 ஆம் இலக்கமுடைய பிளௌசர் வகையினை சேர்ந்த மோட்டார் சைக்கிள் 01.
02. துவிச்சக்கர வண்டி 01.
03. கபில நிறமுடைய வேலைப்பாடுகள் செய்யப்பட்ட பிளாஸ்டிக் கதிரைகள் 10.
04. 04 அடி நீளமான கபில நிறமுடைய தம்ரோ மேசை 01.
05. SGL வகையினை சேர்ந்த 42 அங்குல நீளமான LED தொலைக்காட்சி 01 மற்றும் சப்வுபர் செட் 01 மற்றும் DVD பிளேயர் 01.
06. இனோவெக்ஸ் வகையை சேர்ந்த ஸ்டேண்ட் மின்விசிறிகள் 02
07. அயன் போட் 01.
08. சம்சுன் வகையை சேர்ந்த 5 அடி நீளமுடைய குளிர்சாதனப் பெட்டி 01.
09. 5 ½ X 5 அளவினை உடைய வேலைப்பாடுகள் செய்யப்பட்ட அலுமாரி 01.
10. சிறிய எழுத்து மேசை 01.
11. 6 X 4 அளவினை உடைய 2 கதவுகளை கொண்ட உருக்கு அலுமாரி 01.
12. அலுவலக கதிரை 01 (நீல நிறமுடைய)

டாக்டர் ஆர். ஜியோமெல்ரோய் குரூஸ்,
பதிவாளர்/பிரதி பிசுக்கால்
சமாதான நீதவான் (தீவு முழுவதும்)
புரொபெட் அதிகாரி,
மாவட்ட நீதிமன்றம் - திருகோணமலை.

2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி,

04 – 393/2

---

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம்

கொழும்பு 06, ஹெவ்லொக் வீதி, இல. 291/ 2 எனும் முகவரியில் அமைந்துள்ள ஏசியன் வெயார்ஹவுசிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 267 (1) (அ) மற்றும் 270 (உ) மற்றும் (ஊ) மற்றும் 277 (1) ஆகியவற்றின் கீழ் நீதிமன்றத்தால் மூடுவதற்கான விண்ணப்பம் தொடர்பாக -

இலேகுட்டிகே லொரைன் நிர்மலா திலக்கரத்ன,
மனுதாரர்,
இல. 05, புனித அன்னம்மாள் வீதி,
பேருவளை.

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனத்தை மூடுவதற்கான மனு 2024, சனவரி 11 ஆந் திகதி மேற்படி மனுதாரரான பேருவளை, புனித அன்னம்மாள் வீதி, இல. 05 எனும் முகவரியைச் சேர்ந்த இலேகுட்டிகே லொரைன்

நிர்மலா திலக்கரத்னவின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியான மஹா இந்துருவ, உடுமுல்ல, இல. 476ஏ எனும் முகவரியைச் சேர்ந்த திரு. எம். ஏ. டி. தேஷான் விமலரத்னவினால் குறித்த நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாக இதன் மூலம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது. மேலும் அந்த மனு 2024, மே 27 ஆந் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதுடன், மேற்கூறிய மனுவின் மீதான உத்தரவை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்பும் அந்த நிறுவனத்தின் எந்தவொரு கடனாளி அல்லது பங்களிப்பாளரும், வழக்கு விசாரணையின் போது நேரிலோ அல்லது அந்த நோக்கத்திற்காக அவரது சட்டத்தரணி அல்லது ஆலோசகர் வாயிலாகவோ ஆஜராகலாம், மற்றும் கீழே கையொப்பமிட்டுள்ள நபர் கோரிக்கை விடுத்து, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில், மனுவின் பிரதி குறிப்பிட்ட நிறுவனத்தின் எந்தவொரு கடனாளி அல்லது பங்களிப்பாளருக்கும் வழங்கப்படும்.

கையொப்பம்,
இலேகுட்டிகே லொரைன் நிர்மலா திலக்கரத்ன,
இல. 05, புனித அன்னம்மாள் வீதி,
பேருவளை.
தொலைபேசி இல. : 0773545271

குறிப்பு : மேற்படி மனுவின் விசாரணையில் ஆஜராக விரும்பும் எந்தவொரு நபரும் அத்தகைய விருப்பத்தை 13 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள காலம் மற்றும் முறைமைக்கு அமைவாக எழுத்துபூர்வமாக அறிவித்து, மேலே பெயரிடப்பட்ட இ. லொ. நி. திலகரத்னவுக்கு தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். அந்த அறிவிப்பில் அந்த நபரின் பெயர் மற்றும் முகவரி அல்லது நிறுவனம் என்றால் அந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியைச் குறிப்பிட்டு, அவரது அல்லது அவர்களது சட்டத்தரணியால் (ஏதேனும் இருப்பின்) கையொப்பமிடப்பட்டு, நேரில் விநியோகிக்கப்பட வேண்டும். அல்லது தபாலில் அனுப்பி வைப்பதாயின், 2024, மே 25 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்குப் பிந்தாமல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இலேகுட்டிகே லொரைன் நிர்மலா திலக்கரத்ன,
இல. 05, புனித அன்னம்மாள் வீதி,
பேருவளை.

04-379